ஞாயிறு வெளியீடு. விலை 0-1-3. REGD. NO. M. 4455

# திராவிடநாடு

விளம்பர விகிதம்.
இஞ்சு ஒன்றுக்கு 1-0-0.
சர்க்கார் கோர்ட்டு 2-0-0

வருடசந்தா ரூ. 5—0—0
ஆறுமாதம் ரூ. 2—8—0
தனிப்பிரதி ரூ. 0—1—3

மலர் 2 | காஞ்சிபுரம் 30—1—44 சுபானு தை 17—ஞாயிறு | இதழ் 46

## ★ பகற்கொள்ளை! ★

பரதன்.

தானமும் தட்சணையும், தருவதுவதோ தலைபோகிறகாரியம் போன்றதென்று, எழுதுகிறாயே, பற்களை வெளியே காட்டிப் பாப்பனர் பிச்சை கேட்கையிலே, கருணையின் காரணமாகத் தமிழன் வீசும் சில்லரைக் காசுகள்தானே, தானம் தட்சணை என்பதெல்லாம், இதைப்பிரமாதப் படுத்துகிறாயே சரியா, என்றோர் தோழர் கேட்கிறார், சென்ற இதழில் தானங்கள் பெறுவது என்றமுறை, ஆரிய ஆட்சி வகுத்துவைத்துக்கொண்ட வரிவசூல் சூட்சமம் என்பதை விளக்கி நான் தீட்டியது கண்டு.

தானங்கள் தருவது தயவு தாட்சணியத்துக்கும், தரித்திரத்தைக்கண்டு பச்சாதாபப்பட்டதற்கும் அறிகுறி என்று கருதும் அன்பர்கள், அந்த தானவிஷயமாக ஆரியர், எத்தகைய ஏடுகளைக் குவித்துள்ளனர் என்பதை அறியின், எவ்வளவு சூட்சமமானசதி, அந்தக் காலத்திலே நடந்தது என்பதை உணருவர். பஞ்சடைந்த கண்களைக்கண்டதும், நெஞ்சிலேஇரக்கங்கொண்டு, நம்மைப் போன்றமக்கள் நாரும் நரம்புமாக இருக்கின்றனரே என்று கருணைகாட்டுவதைக் கூடாது என்று கூறும் குரூரகுணமுடையோனல்ல நான்! எளியோரை, வலியோர் ஆதரித்தல்கூடாது என்றுரைக்க எந்த அறிவிலியுங்கூடச் சம்மதியான். என்கருத்து, எளியோர் என்றும் வலியோர் என்றும் பேதம் இருத்தலே கூடாது என்பது. வலியோர் சிலர் இருப்பதற்கே எளியோர் எனும் நிலையிலே பலர் வைக்கப்பட்டுள்ளனர் என்பதும் என் கருத்து. இந்தநிலை ஒழியவேண்டும். இடைக்காலத்திலே, நெஞ்சில் ஈரம்இருத்தல் வீரர்க்கு அழகுஎன்பது என் எண்ணம். எனவே, பஞ்சை பனைகட்கு உதவிசெய்தல்கூடாது என்றுங்கூறேன், ஊருக்குத் தம்பட்டம்டித்து, இந்த உதவியைச்செய்வது படாடோபத்துக்குப் பணம் தருவதேயன்றி உண்மை அறமுமாகாது என்றும் கூறுவேன். ஏழை படும் பாடுகண்டு, மனம்இளகி உதவி செய்வது என்ற முறையிலே உள்ளதல்ல, பூசுரருக்குத்தரும் தானமும் தருமமும். நற்காரியம் புரிபவன், நாதன் அருள் பெறுவான் என்றுகூறும் மதக்கோட்பாட்டை முன்னிறுத்தி, அத்தகைய நற்காரியம் எதுவெனில், ஆரியருக்கு விதவிதமான தானதருமம் செய்வதேயாகும், என்று விளக்கம் உரைத்து, ஏடுகளை அந்நாளிலே எழுதிவிட்டனர். எனவே, முக்திமார்க்கத்திலே உதவக்கூடியது, போகிறதிக்கு நல்லது, மோட்சசாம்ராஜ்யம் தரக்கூடியது, அந்த லோகத்து வாழ்வை அளிக்கக்கூடியது, இந்திரனோடும் சந்திரனோடும் ஒப்பாகஇருக்கும் நிலையைத்தரக்கூடியது, என்றெல்லாம், தானதருமங்கட்கு பல்வேறு பலன் கிடைப்பதாகப்பண்டு பார்ப்பனர் கூறினர். இங்ஙனம் பலன் கோரிச்செய்யும் தருமத்தைப் பழம் தமிழ்ப்புலவருள் ஒருவர், பரிகசிக்கிறார்! அதிலே பண்பு இல்லை, அதுவெறும் வியாபாரம் என்று கூறுகிறார். இம்மை செய்தது மறுமைக்கு ஆம், எனில் அது, செய்பவனுடைய நற்குணத்துக்கோ, நல்லமனதுக்கோ எங்ஙனம் சான்றாகும்? யுக்திக்கு வேண்டுமானாலும் அது சாட்சி. இங்கே செய்யும் தருமம், அங்கே (மேல் உலகிலே) பலன் வாங்கித்தரும் என்ற முறையிலே தருமம் செய்தல், அறமல்ல, அது வியாபாரம், அத்தகைய வியாபாரியல்ல, ஆய் என்ற உபகாரி, என்று வள்ளல் ஒருவனைப்பற்றி உரைக்குங் காலை, அறத்தின் தன்மையாது என்பதையும் அப்புலவர் விளக்கினார். இவ்விதமான உன்னதவிளக்கத்துக்கு முற்றிலும் முரண்படுவது, ஆரியர் வகுத்த தானதரும திட்டங்கள். ஆபாசமும் அறிவுக்குப் பொருந்தாததும், வெறுங்கற்பனையும் கருத்தைக் கெடுத்திடுவதுமாகிய, பொய்யுரைதனைக் கூறித், தமிழ்மக்களைத் தாசர்களாக்கவே, தானத்தைப்பற்றிப் பலப்பலகதைகளை ஆரியர் எழுதிவைத்தனர். எனவேபணம் பறிபோவதுடன், புத்தியும் போய், தற்குறித்தனமும் தரித்திரமும் தமிழனுக்குச் சொத்தாகி விடுகிறது. எனவேதான் நான், இத்தானநிதிகளைக் கண்டிக்கிறேன். சாமான்யர்கள் சொல்லுகிறார்கள் என்று எழுதினால், எவரும், அதுசரியா முறையா, அறிவுக்குப் பொருந்துகிறதா இல்லையா, என்பதை ஆராயத் தொடங்குவர். அந்த ஆராய்ச்சி மனோபாவம் வளரக்கூடாது, என்பதிலே, ஆரியர் ஆதிகாலம் முதலே மிகமிக அக்கரைகாட்டியுள்ளனர். "படித்த சூத்திரனையும் குளித்த குதிரையையும் நம்பாதே" என்று மனு தன்குலத்தவருக்குக்கூறினாராம்! ஆண்டவன் சொன்னது என்று எதையும் தமிழரிடை பரவச்செய்யலாம் என்று ஆரியர் தெரிந்து, தானவிஷயமாக இன்ன கடவுள் இன்ன ரிஷிக்கு உரைத்தார், என்று முத்திரையிட்டு, ஏடுகளை வெளியிட்டனர். இதோ, பாருங்கள், கீழ்வரும் தீட்டுவது, தானவிஷயமான ஒரு ஆரிய விளக்கம், இது சாமான்யமானதன்று! விஷ்ணு கருடனுக்குக் கூறியது இது

விஷ்ணு கருடனுக்கருளிய உபதேசங்கள்:—

1. பிராமணனுக்குத் தானங்கள்வாங்கலும் யாகம்செய்தலும் செய்யஉரியவர்கட்குச் செய்வித்தலும் வேதமோதலும் ஓதஉரியவர்களுக்கு ஓதுவித்தலும்; க்ஷத்திரியரும் வைசியரும் தானம் கொடுத்தலும் யாகம்செய்தலும் வேதம் ஓதுதலும்; சூத்திரருக்கு (திராவிடமக்கள்) முதல் வருணத்தோர் மூவர் தொழில்களைப்பணிந்து செய்தலுமே உரியதாகும்.

2. சூத்திரசவத்தோடு பிராமணர் சுடுகாட்டுக்குப்போனால் அப்பார்ப்பானுக்கு மூன்றுநாளைக்கு அசௌசமுண்டு. மூன்றுநாள் கழித்தபின்னர் அப்பிராமணன் காவேரியில் ஸ்நானஞ்செய்து சுத்தனாதல்வேண்டும்.

3. அரசன் பிராமணனுடையபொருளையபகரித்துச் சதுரங்கசேனையுடன் யுத்தம்செய்யின் அச்சேனை யுத்தபூமியில் மடியும்.

4. பிராமணனுடையபொருளை அபகரித்தால் குலம் நாசமடையும்.

5. எந்தப் பொருளாவது எமக்குத் தொண்டனாகிய ஒரு பிராமணன்கையில்

(2ம் பக்கம் பார்க்க)

## பகற்கொள்ளை!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொடுக்கப்படவில்லையோ அப்பொருள் உடையவனுடைய பொருளன்று, அது உலோபியினிடத்திலிருக்கும் பொருள்.

6. தர்மதானங்களைச்செய்தால் எண்ணியவற்றையெல்லாம் எண்ணியபடி பெறலாம், மோக்ஷம்கிடைக்கும்.

7. மரித்தவனுக்குப் புத்திரர் கிரித்தியம் செய்யாவிட்டால் அவன் இராப் பகல் ஐயோ! ஐயோ! என்று உலகமெங்கு மலைந்து பின்பு புழு முதலிய சன்மமெடுத்து மீண்டும் மனிதருள் கடைபோன் வயற்றில் பிறந்துமரிப்பான்.

8. உத்தமபலனை யடையவேண்டுமென்று விரும்புவோன் கோதானம் முதலியவற்றைப் பிராமணனுக்குக் கொடுத்தல்வேண்டும்.

9. மரித்த பதினொன்றாம்நாளிலும் பன்னிரண்டாம் நாளிலும் பருத்தியின் செம்பின்வட்டிலில் சாளக்கிராமம வைத்துவஸ்த்திரம் முதலியவற்றுடன் சத்பிராமணனுக்குக் கொடுத்தல்வேண்டும்.

10. இறந்தவன் வைதரணியென்னும் நதியைக் கடப்பதற்குக் கரும்பினால்ஓடம் செய்து, பட்டினால் அதைச்சுற்றி நெய் வார்த்த வெங்கலப்பாத்திரத்தை அதனுள்வைத்துஅதை பிராமணனுக்குத் தானங்கொடுக்கவேண்டும்.

11. மரித்தவரைக் குறித்துக் கிருத்தியம் செய்யும்போது பிராமணர்களுக்கு யாவன் பூரிகொடுக்கிருனே அவன்வேண்டிய நல்லவையாவும் பெறுவான், பிரேத சன்மம் அடையான்.

12. இறந்தபின் ஜீவன், புத்திரனால் பிராமணமுகமாய்க் கொடுக்கப்பட்டனவற்றையுண்டு யமபடர்கள் பாசத்தால் பிணித்திழுக்க, வீட்டைத்திரும்பித்திரும்பிப் பார்த்துக்கொண்டே கஷ்டப்பட்டு உதையுண்டு கதறிக்கொண்டு, நாளொன்றுக்கு இருநூற்றுநாற்பத்தேழு காதவழி வீதம் மனுஷலோகத்திலிருந்து யமபுரிக்குஎண்பத்தாறுயிரம்காதவழி நடக்க வேண்டும்.

13. ஜீவன் சிரவணரைப் பூசித்தவனயின் அச்சிரவணர் பாவத்தைச் சொல்லாமல் புண்ணியத்தை மாத்திரம் யமனுக்குச் சொல்லுவார்.

14. யமதூதர்கள் சீவனைவருந்தாமல் அழைத்துப்போவதற்காக, குடையும், மரவடியும், தண்டமும், வஸ்திரமும், மோதிரமும், உதககும்பமும், ஆசனப் பலகையும், அன்னமும், பூசாதிரவியமும், பூணூலும், தாமிரச் செம்பும், அரிசியும், உப்பும் பருத்தியும், எள்ளோடு பாத்திரமும், கோதுமையும், கடலையும், மொச்சையும், எள்ளும், கொள்ளும், பயறும், துவரையும் பாத்திரங்களில்வைத்து சத்பிராமணர்களுக்குத் தானமாகக் கொடுக்கவேண்டும்.

15. தானதருமம்செய்தவன் எக்காரணத்திலேனும் எச்சன்மம் பெறினும் அத்தானதருமத்தின் பலனை அச்சன்மத்தில் அடைவான், பாபம்செய்தவன்பிரேதசன்மம் அடைவான்.

16. ஒருவன் கிணறும் நடைவாவியும் குளமும் பூஞ்சோலையும் தண்ணீர்பந்தலும் சத்திரமும் தேவாலயமும் உண்டாக்கிப் பிறகு அவைகளை விற்பவன் பிரேதசன்மம் அடைவன்.

17, மாண்டவனுக்குப் புத்திரர் ஓராண்டுவரையிலும் சிரார்த்தம்முதலிய கருமங்களைச் செய்தால் இறந்தவன்விமானத்தின் மேலேறி நல்லுலகுசேர்வான்.

18. பிராமணர்களுக்குக் குடைமரவடி மோதிரம் பலவகை வஸ்திரம் பொன்னால் குடங்கள்செய்து பாலும் நெய்யும் அவற்றில் நிறையவார்த்துத் தானம்கொடுததால் மரித்தவன் பிரேத சன்மத்தினின்று நீங்குவான்.

19. மரிக்குங்காலத்தில் திலமும் இரும்பும் லவணமும் பருத்தியும் தானியமும் பொன்னும் பூமியும் கோவும் தானம்செய்யின்மிகவிசேடம்

20 மாய்ந்த சீவனைக்குறித்துப் பூமி தானம்செய்யின் பூமி எத்தனையடியுள்ளதோ அத்தனைஆண்டுகள் அச்சீவன் சுவர்க்கத்தில் வசிப்பான்.

21. நாள்தோறும் ஒரு சத்பிராமணனுக்குப் போசனம் செய்வித்து அன்னமும் புனலும் கொடுத்துவந்தால் மாய்ந்த சீவன் இன்பமடைகின்றது.

22. கன்னிகை, பூமி, கோ, திலபருவதம், யானை முதலியவற்றைத் தானங் கொடுத்தவனும் தேவாலயத்தைக் கட்டினவனும் வீடுகட்டித்தானஞ் செய்தவனும் மூன்றரைக்கோடி வருடம் சுவர்க்க வாசம் செய்வான்.

23. பிராமணருக்கு வருஷாசனம் கொடுப்பவனும் சுவர்ணத்தினலும் தாமிரத்தினலும் வெள்ளியினலும் இரும்பினலும் பிரதிமைகள் செய்து கும்பங்கள் வைத்து அவற்றில் நவரத்தினங்கள் பெய்து தானங்கொடுத்துக் கிருத்தியங்களைச் செய்தால் இறந்தவன் நற்கதியடைவான்.

24. பிராமணன் கடல்புடை சுற்றித் தானம் வாங்கினலும் அவன்தானங் கொடுத்தவனுக்கு விசேடபலனை யுண்டாக்குவன். இவ்வளவுதானு! இதோ பாருங்கள் மற்றோர் தானதிகளுக்கான விளக்கம்.

1. **இரண்யகர்ப்பதானம்**-பொன்னால் (72) அங்குலம் உயரமும் அதில் மூன்றம்சம் அகலமும்உள்ள தாமரைபோன்ற கும்பஞ்செய்வித்து அதில் தயிர், நெய், பால் முதலிய நிறைத்து வேதிகை செய்வித்து அதின்மேல் இரண்டு மரக்கால் எள்ளைப் பரப்பி அதன்மீது கும்பத்தை நிறுத்தித் தான கற்பவிதிப்படி பூசித்துப் பிரதக்ஷணமுதலியசெய்து அந்த இரண்ய கும்பத்தில் ஒரு விஸ்வாசகாலம் இருத்தல் வேண்டும். இப்படி எஜமானன் கடத்திருந்து வெளிவருமுன்(பிராம்மணன்)ஆசாரியன் இரண்யகும்பத்திற்கும் இரண்யகற்பனுகியபுருஷனுக்குக்கர்ப்பாதானம், பும்சவனம், சீமந்தம், சாதகர்மம் முதலிய கிரியைகள் செய்தல்வேண்டும். பின்எஜமானன் அதைவிட்டு வெளிவந்து அந்தக் கலசத்துடன் கிராமாதிகளையும் தானஞ் செய்யவேண்டும். அவ்வகை செய்தவன் (100) கோடி கல்பம் பிரமலோகத்தில் வசித்துத் தனது பிதுருக்களை நரகத்திலிருந்து நீக்குவன்.

2. **இரண்யாச்வதானம்**-(3) முதல் (1000) பலமுள்ள பொன்னால் குதிரையொன்றுசெய்வித்து (8) சுவர்ண கலசங்களையும் வேதிகையில் தாபித்து விதிப்படி பூசித்துத்தான மளிப்பது. இப்படிச் செய்தவன் தேவர்களால் பூசிக்கப்பட்டு இந்திரபதம் அடைவன்.

3. **இரண்யாச்வரததானம்** (3) முதல் (1,000) பலமுள்ள பொன்னால் இரதம் செய்வித்து அதில் தன் இஷ்டதேவதையைப் பொன்னாற்செய்வித்து நிறுத்தி அத்தேர்க்கு (8) அல்லது (4) பொற்குதிரைகள் பூட்டி வஸ்திராதிகளால் அலங்கரித்து விதிப்படி பூஜித்துத்தானஞ் செய்வதாம். இவ்வகை தானஞ்செய்தவன் பாபம் நீங்கித் தேசோசரீரனாய்ச் சிவபதமடைவன்.

4. **உபயகோமுகிதானம்**- பசுவின்பிரசவகாலத்தில், பசுங்கன்றின் பாதிதேகம் தாயின் வயிற்றிலும் மற்றப்பாதி வெளியிலும் இருக்கக்கண்டு பசுவினைப் பொன், வெள்ளிமுத்து முதலானவைகளால் அலங்கரித்துத் தக்ஷிணையுடன் வேதியனுக்குத் தானஞ்செய்வ்தாம். இவ்வகை தானஞ்செய்தவன் தரணிதான பலனடைவதன்றிப் பிதுருக்களையும் திருப்தி செய்தவனகிறன்.

5. **கனககாமதேனுதானம்**-(5)முதல் (1,000) பலமுள்ள பொன்னால் நீர்க்காக்கை, அன்னம்முதலிய பக்ஷிகள், வித்தியாதார பிரதிமைகள் முதலியவற்றோடுகூடிய (10) கல்பகக் கொடிகளைச் செய்வித்து விதிப்படி பூசித்து வேதியர்க்குத் தானஞ்செய்வதாம். இவ்வகை புரிந்தவன் சத்திய உலகம் அடைவன்.

6. **கனககாமதேனுதானம்**–(1,000) (500) (250) கணக்குள்ள் பலத்தோடு கூடய பொன்னால் கன்றோடுகூடிய பசு செய்வித்து விதிப்படி பூசித்துத் தானஞ் செய்வதாம். இவ்வகைத் தானஞ்செய்தவன் தேவர்களால் பூசிக்கப்பட்டுச் சிவபதம் பெறுவன்.

(7-ம் பக்கம் பார்க்க.)

தொடர்கதை

# பார்வதி பி. ஏ;

சௌமியன்.

கதை கற்பனையே, கதையில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவனவல்ல.

[முன்பு:-லோபி ஆலாலசுந்தரர், அறிமுகப் படுத்தப்படுகிறர். அவருக்கு வாரிசாகவர இருக்கும் பார்த்திபன் எனும் வாலிப வாய்வீரனுக்குக் காதலி பார்வதி B. A; இவள் ஓர் இலட்சியவாதி. குமார் எனும் பாட்டாளி, பார்த்திபனுடைய பிரசங்கத்தில்இலயிக்கிறனகுமார்பொதுப் பணத்தைக் கொள்ளையடித்து மறைந்து விட்டதாகப் பத்திரிகையிலே செய்தி. பார்வதி கவலைப் படுகிறள். உத்தமி என்பவளின் சிநேகிதத்தால் பார்வதிக்கு டைபிஸ்ட் வேலை கிடைக்கிறது. பார்த்திபனல் 'ரட்சகன்' என்னும்பத்திரிகை நடத்தப்படுகிறது. தந்கள் குமரகுருபரர், பார்த்திபனுக்கும் ஜெயத்துக்கும் சிநேகிதமுண்டாகும்படி. வேலைசெய்து மகிழ்ச்சியடைகிறர். இதற்கிடையே பார்வதியின் தோழி, உத்தமிக்கு நரசிம்மன் என்பவன் காதலனுகிறன். பார்த்திபன், கதகளிநடனம் பார்க்கக் கேரளம் செல்கிறன். உத்தமி கருவுற்றள். நரசிம்மன், குமுதினி என்பவளைக் கலியாணம்செய்து கொண்டு, உத்தமியைக் கைவிடுகிறன், குமுதினியின் உதவியால் உத்தமி பெங்களூர் செல்கிறள். அங்கு லேடிடாக்டர் லலிதாதன் கதையைக் கூறுகிறள். பிறகு,....]

"அவள்ஓர் அழுமூஞ்சி, மற்றவர்களின் புன்சிரிப்பைக்கண்டதால் பொருமை கொண்டுபிதற்றுகிறுள்" என்பதுதான் எல்லோரின் எண்ணமும், ஆனல் அதைக் கூறயாருக்கும் தைரியமில்லை. திலகாசற்றுத் துடுக்கானவள், கலகக்காரி. ஆகவே அவள், "புன்சிரிப்பே தவறு" என்றுகூறியதைப் பல மாணவிகள் ஆதரித்ததுடன், புரபசர் பாஸ்கரனைக் காணும்போதெல்லாம் நான் புன்சிரிப்புடன் பேசுவதைக் கண்டிக்கலாயினர். எனக்குக் கோபம்பிறந்தது, "வொழுத்துப் போனவர்களின் கோணல்புத்திக்கு யார் மதிப்புக்கொடுப்பார்கள்" என்றுநான் வெடுக்கெனப் பேசிவிட்டேன். பிறகு விவாதசம்பவத்தையே மறந்துவிட்டேன். திலகாவோ, தனது திக்விஜயத்தைத் துவக்கிவிட்டாள். இரண்டோர் நாட்களுக்குள் கல்லூரியிலே, பல மாணவிகள் என்னைக் கண்டபோது, லலிதா—பாஸ்கர்என்று கேலிபேசலாயினர். யாரையாவது தைரியமாக, என்னைப்பற்றியா இப்பேச்சு என்றுகேட்டால், "உன்னைப் பற்றிஎன் பேசுகிறேும்? நியூதியேட்டர்சில், லலிதா—பாஸ்கர் என்று புதியபடம் எடுக்கிறுர்கள் என்று மூவிமிரர் பத்திரிகையிலே பார்த்தோம்" என்றபதிலே கிடைக்கும், வதந்தியோ வகுப்புகளில் பரவிவழிந்து ஆசிரியர்களின் அறைகளிலே பெருகிவிட்டது. ஆசிரியர்களுக்குள்ளாகவே, கேலிப்பேச்சுகள் நடைபெறத்தொடங்கின. ஒருநாள், திலகாவை, புரபசர் பாஸ்கர் தன்அறைக்கு வரவழைத்து ஏதோபேசினூர் என்று கேள்விப்பட்டேன், சரி,திலகாவுக்குஅவர். சரியானசவுக்குக்கொடுத்திருப்பார்என்று எண்ணிச்சந்தோஷித்து, மறுதினம், புரபசர் பாஸ்கரனைக், கண்டபோது நமக்கு உதவிபுரிந்தவருக்கு வந்தனம்கூற வேண்டுமென்றெண்ணி (Thanks) வந்தனம் என்றுகூறினேன். புரபசர், தமது ஆனந்தத்தை, அந்த முப்பத்திரண்டு பற்களும் காட்டவேண்டுமென்று கருதியவர் போல, நின்றுர். என்முகத்திலே அசடு வழியாமல் இருக்குமா! "திலகாவை..." என்றுநான் துவக்கினேன். அவர் அடிமூச்சுக்குரலாலே அதைமுடித்தார், "கண்டுபேசினுயோ" என்று. திலகாவைத் தாங்கள் சரியானபடி கண்டித்திருப்பீர்கள் என்றுகூற நான் நினைத்தேன். அவரோ, திலகாவை நான் கண்டு பேசினேன் என்று கூறப்போகிறேன் என்று யூகித்துப்பேசினூர். இந்த "யூகம்" எனக்குச் சந்தேகமூட்டிற்று, புரபசர் பேசுவதைப்பார்த்தால் திலகாவைப் புரபசர் தபாலாபீசாக்குகிறுர் என்றல்லவோ தோன்றுகிறது, இதுஎன், கலகமூட்டும் கள்ளியைப் புரபசர் கண்டிக்க வேண்டியதல்லவா முறைஎன்று எண்ணினேன். மறுவிநாடி என் சந்தேகம் போய்விட்டது. புரபசர், திலகாவைக் கண்டித்ததோடுவிடாமல், லலிதாவிடம்போய் மன்னிப்புக் கேட்டுக்கொள் என்று உத்தரவுசெய்தார் போலிருக்கிறது. ஆகவேதான், திலகாவைக்கண்டு பேசினுயோ என்றுகேட்டார், என்று நானுகமனதைச் சமாதானப்படுத்திக் கொண்டேன். காலடிச்சத்தம் கேட்டதும், புரபசர், "பேசநேரமில்லை, இதைப் படித்துப்பார்" என்றுகூறி ஒரு கடிதத்தை என்னிடம் தந்துவிட்டுப்போய் விட்டார். ஆச்சரியம், சந்தேகம், திகில், மூன்றும் என்னைப்பிடித்துக்கொண்டன. அன்றிரவு நான் தனியாகஅக்கடிதத்தைப் படித்துப்பார்த்தேன், என்மனதிலே என்றுமில்லாத் கொந்தளிப்பு உண்டாயிற்று. ஏனெனில், புரபசர், என்னைப் படித்துப்பார் என்று கூறித்தந்தகடிதம், ஒருரசமான காதற்கடிதம்! காதற்கடிதமென்னமோ, புரபசர்தான் கொடுத்தார். என்னைக் காதலிப்பதாகத்தான் கடிதத்திலே சித்திரநடையிலே எழுதப்பட்டிருந்தது. ஆனல், கடிதத்திலே, கையொப்பமிட்டிருந்ததோ, புரபசரல்ல! என்மாணவத்தோழன் மாதவன்!! எங்கள் கல்லூரியிலேஎப்போதுபார்த்தாலும்புத்தகசாலையிலே புதைந்துகிடப்பவன் மாதவன். ஆசிரியர்கள் பலரும், அவனிடம் மதிப்புக் கொண்டிருந்தனர், படிப்பதன்றிவேறேர் பொழுதுபோக்கே மாதவனுக்குக் கிடையாது. விளையாட்டுமைதானங்களிலே அவனைக்காணமுடியாது. விருந்து வேடிக்கைகளிலே அவனை ஈடுபடச் செய்யமுடியாது. வகுப்புகளிலேஆசிரியர்கள் பாடம் கற்பிக்கும்போது, மாதவனின் முகத்தை அடிக்கடி கவனித்துக்கொள்வர், அவன் முகம் திருப்தியைக் காட்டினுல்தான் ஆசிரியர்களுக்குத் திருப்தி ஏற்படும். தமிழிலே, மாதவனுக்குத் தனியானபற்று. அவனுடைய தூண்டுதலாலேயே, எங்கள் கல்லூரிப் புத்தகசாலையிலே பல தமிழ்ப் புத்தகங்கள் சேர்க்கப்பட்டன. ஆண்டுதோறும் நடைபெறும் தமிழ்க்கட்டுரைப் போட்டியிலே, தவருமல், மாதவனுக்குத்தான் பரிசுகிடைக்கும். மற்றமாணவர்களுக்குக் கொஞ்சநாட்கள், அவனிடம் பொருமை இருந்தது, பிறகு போய் விட்டது, மாதவனைப்போல, நாம் படிக்கமுடியாது, அவன் ஒருஅபாரமான மூளையுடையவன், என்று மாணவர்கள் கூறுவர். படிப்பிலே அவன் முதலிடம் பெற்றதுபோலவே, நடத்தையிலேயும் இருந்தான். அவன் நடக்கும் சத்தமே கேட்காது. இடித்துத்தள்ளிக்கொண்டு போவது, இடம்விட்டு இடம் உட்காருவது, ஏளனமொழிபேசுவது, முதலியன அவனுக்குத்தெரியாது. உடை விஷயத்திலே ஒருதுளியும் அக்கரைகிடையாது. அப்படியொன்றும் அவன் ஏழையுமல்ல! பெண்கள் விஷயத்திலோ, அவன் ஓர் துறவிபோலவே நடந்துகொள்வன்—துறவிஎன்றல் காவிஅணிந்த காமாந்தகாரன்போல அல்ல! மரியாதையாகக் கொஞ்சம் கூச்சத்தோடு பேசுவான், கேட்டகேள்விக்குச் சுருக்கமாகப்பதில் கூறுவான், பிறகு மௌனமாகிவிடுவான். வகுப்புகளிலே, குறும்புக்காரிகள்,வேண்டுமென்றே கனைப்பதுண்டு, யாரார் திரும்பிப்பார்க்கின்றனர், என்றுபார்க்க. மாதவன்தவிர மற்றவர்களெல்லாம் திரும்பிப் பார்ப்பர். படிப்பிலே அவனுக்குள்ள அக்கரைமட்டுமல்ல அவன் போக்குக்குக் காரணம், ஏதோ பெரியதோர் விசாரத்தால் அவன் அப்படி இருக்கிறுன் என்று பலர் கூறுவர். "அவன் மனம் ஒரு எரிமலை, நெருப்பைக்கக்கும்நேரம்வரவில்லை, வந்தால் ஆபத்துப் பிரமாதமாக இருக்

(6-ம் பக்கம் பார்க்க.)

திராவிட நாடு

காஞ்சி 30—1—44 ஞாயிறு

# விருந்திலே, மருந்து!

★

**"தூய்மையே வருக! சுடரே வருக!
வாய்மையே வருக! வருகவெந்தாய்!"**

தூய்மையும் வாய்மையும் சுடர்விளங்கும் தந்தைபோன்றாரைத், தண்டமிழ் பருகித்தவழும் மைந்தர்கள், வருக! வருக! என்று, அன்புடன் அழைத்தனர், மாலை பலசூட்டி, மகிழ்வினைக்காட்டி, தந்தையைத் தனயர் பரிவுடன் அழைத்தல் முறைதானே, என்பர். இத்தந்தையினை இத்தலையர், காரணங்கூறுவது, தூய்மையே! சுடரே வருக, என்றுஅழைக்கவில்லை. கண்ணை இழந்தவளைக் கண்ணுயிரமென்றுகூறும் பான்மையிலே,அமைக்கவில்லை பா. வரவேற்பு இதழாரம்பத்திலே,

"உலகம் உவப்பவலனேர் புதிரி தரு
பலர்புகழ் ஞாயிறின் பான்மைத்தாகி
மலர்தரு முகத்தெழிலிள நகைபூப்ப இத்
தலம்பெற தவப்பயனாகித் தமிழ்த்தாய்
துயர்கெட வெழுந்ததோன்றல்!"

என்று கூறினர். கூறுமுன்னர் தந்தையாரின் முகத்திலே, எழில் இளநகை பூத்திருந்ததோ, இல்லையோ, நாமறியோம், ஆனால், ஞாயிறே! தவப்பயனே! தோன்றல்! எனும் வாழ்த்துரைகளைக் கேட்டபிறகு, அறுபதாண்டானாலும், முகம் மலர்போலாவது முறையே, அழகிய புன்சிரிப்புத் தவழ்வதும் இயல்பே!

"தந்தை", அந்தப்போதிலே, சிந்தித்திருப்பார், "இஃதுஎன்னே! தமிழ்த்தாய் துயர்கெட எழுந்த தோன்றல்" என்று நம்மை அழைக்கின்றனரே! நாம் செய்ததில்லையே அப்பணியினை, அன்றொருநாள் தமிழ் நாடெங்கும் ஆபத்து! ஆபத்து! இந்தியால் வந்தது தமிழருக்கு ஆபத்து! என்று ஆர்ப்பரித்தவரும், அருஞ்சிறை புகுந்தவரும், அந்தச்சுயமரியாதைக்காரகளன்றோ! நாம், அகத்திருந்தோம், புறத்தே நடந்தவைப்பற்றிப் போர்வீரர் கூறிடக்கேட்டோம், களம் சென்றோமில்லையே! செந்தமிழ்நாடே இதனை அறியுமே! உண்மை இங்ஙனமிருக்க, இவர்கள் தமிழ்த்தாயின் துயர்கெடநான் பணியாற்றினேன் என்று கூறுகின்றனரே, இதென்ன விந்தை!" என்று, அவர், காவியமொழிபயின்ற கலியாணசுந்தரனார் எண்ணாதிருக்கமுடியாது. அவரைத்தான், நாம்மேலே தீட்டியுள்ளபடி, திருவாய்மொழிகூறி, லால்குடி திருவள்ளுவர் கழகத்தார் 3—1—44ல் முறுவலுடன் முகமன்கூறி வரவேற்றனர். ஆண்டு அறுபதாயிற்று, அதனால்கண்ட பயன் யாது, என்ற கவலை, அன்பர் கலியாண சுந்தரனாருக்கு இல்லை! அக்கவலை, அவருடைய வயோதிகத்தை வாட்டக்கூடாது என்ற நல்லெண்ணத்தால், குளிரால்நடுங்கிய மயிலுக்குப் பட்டுப்போர்வை யீந்த பேகனும், முல்லைக்கொடி படரஇடமின்றித் தவிக்கக்கண்டு தேரை ஈந்த பாரியும், கத்தும் தவளையின் சத்தம் அரகரவென்ற முறையிலே செவியில் பட்டதால் பொன்னும் பொருளும் ஈந்தவேந்தனும் இருந்தார்களாமே தமிழகத்திலே, அந்த முறையிலே, வயோதிகருக்கு வாழ்த்துரை எனும் விருந்தை ஊட்டினர் தமிழர், கவலைதீர்ந்து களிக்கட்டும், முதுமையின் முடக்குவாதத்திற்கு மேற்பூச்சாக இந்த வரவேற்புகள்—அறுபதாண்டு நிறைவுவிழாக்கள் இருக்கட்டும், என்று ஒருவயோதிகருக்கு, நோய்தீர மருந்திட்டோம் என்று களித்தனர். மயிலுக்கு ஆடையும் முல்லைக்குத் தேரும், மண்டூகத்துக்கு மணியும் தந்தசெயல், அறிவுலகத்திலே நகைப்புக்கிடமாவதாகும்! பக்தியால் எதனையும் புரிவர் என்றுகூறும் விசித்திர உலகிலேயுங்கூட, பெற்றவர்களின் பெருமையை விளக்க அல்ல, ஈந்தவர் பெருமையை விளக்குவதே, மேற்கண்ட சம்பவங்களின் நோக்கமாகும் என்ற கருத்து இருப்பது ஏடுபல பயின்ற பாட்டுமொழிப் பண்டிதருக்குத்தெரியும்! அன்பர் கலியாண சுந்தரனாரின் அறுபதாண்டு நிறைவிழாவும், பெற்றோரின் பெருமையை விளக்குவதைவிட, தந்தோரின் தன்மையை விளக்கவே மெத்தவும் பயன்படுவதாகும். ஆனால் அவரோ, பெருஞ்செயல் புரிந்தோர் புகழ்சிக்குரியோர், என்னைப் பலரும் புகழ்கின்றனர், எனவே நான்பெருஞ் செயலைப்புரிந்தவன்! என்று தடுமாற்றத் தர்க்கவாதமுடிவைக்கொண்டு, மூலையிலே இனிஇரேன், என்றுகூறிப், பவனிவரத்தொடங்கினார். அத்தகைய பவனியிலே, லால்குடியிலே, வள்ளுவர் கழகத்திலேசென்றுவரவேற்புப் பெற ஒரு வாய்ப்புப்பெற்றார். பேகனும் பாரியும் பெருங்கொடை ஈந்ததுபோல லால்குடிப் பேரன்பர், அன்பர் கலியாண சுந்தரனாரின் அகம்மகிழ, அணியழகுடன் வரவேற்புக்கூறினர். ஆனால் வெறும் புகழ்ச்சியைத்தருவது எற்றுக்குப் பயன்படும், என்று எண்ணினர். அவர்களின் மனதிலே, தோன்றிய கருத்தினைக் கோர்த்து, வருக! வருக! என்ற வாழ்த்துடன் இணைத்தனர், முல்லையருகே ரோஜா இதழும், அதை அடுத்து தவனமும், இணைத்ததுபோல! வருகவெந்தாய்! என்று அழைத்து, வந்ததந்தைக்கு வள்ளுவர் கழகத்தினர், தமிழகம் கலியாண சுந்தரனாருக்கு எதைக்கூறுமோ அதே கருத்தினையே அழகுறக்கூறினர். அது கேட்ட அவர்தம் மலர்முகம் உலர்ந்ததாம், இளநகை மறைந்ததாம், எழில் சாய்ந்ததாம், ஏனோ பாபம்!

**"தந்தையாய் நின்னைப்
பெற்றும் தளர்ந்தனம்
மைந்தராம் எம்மை
மறந்தனை அந்தோ
அயலார் எம்மை அழித்திட விளைத்த
புயலிடைத்தப்பியும்,
பூசலில் பிழைத்தும்
நிலை கலங்கினம், எம்
மருங்கினும் எதிர்ப்பே
அலைஎன எழுந்த
அனைத்தையும் கடந்தோம்**

என்று கூறினர், வள்ளுவர் கழகத்தினர். நெடுநாட்களுக்குப் பிறகு காணநேரிடும் நண்பரிடம், காணக்காலத்தேபட்ட கஷ்டத்தைக் கூறிடுவது இயல்பு! அதிலும், தந்தையே! என்று அன்புடன் கலியாண சுந்தரனாரை, வள்ளுவர் கழகத்தினர் அழைத்தனர், எனவே, அவரிடம், அதுகாறும் தாமடைந்த துயர்தனைக்கூறல் முறை எனபது மட்டுமல்ல, முக்கியமுங்கூட! அயலாராகிய ஆரியர்மூட்டிவிட்ட இந்தித்தீயால், இடர்ப்பட்டதையும், ஆரியப்புயல் வீசித்தமிழ்ப் பூங்காவை அழிக்க முற்பட்டதையும், அவ்வித இடையூறுகளினின்றும் தமிழர் தப்பியதையும், "தந்தைக்கு"க் கூறினர். இவ்வளவு இன்னலை இவர்கள் அனுபவித்தபோது, தந்தை, என்னசெய்துகொண்டிருந்தார் என்பதறிவிக்கவேண்டுமல்லவா, அதன் பொருட்டு, வள்ளுவர் கழகத்தினர் மேலும்கூறுவாராகி, இச்சீரடிகளைச்சேர்த்தனர், வரவேற்புரையிலே!

**"இத்தனை யிடர்ப்பாடெய்தியுமுன்னை
சித்தந்தன்னில் சினந்தோமில்லை
மாற்றார்க்குழைத்தனை
மனது களைத்தனை!
போற்றவிட்டனை பொழுது
கள் கழிந்த!
அறுபதாட்டையடைந்து மூப்பின்
உறுப்பும் உளமும்
தளர்ந்தனையேனும்
இன்று நீ எங்கட்கு இரக்கங்காட்டின்
என்றும்நின்பணிகேட்டு ஏற்பனபுரிய
பல்லாயிரவருன் பக்கந்தழுமி
சொல் எதிர்பார்ப்போம்
துணைஅடி போற்றி!
காட்டிக்கொடாதீர்! கலையும் கஞ்சியும்
ஊட்டுவாரில்லை ஊரலர் தூற்றும்!
தாயும் தளர்ந்தாள் தன
யர் என்புரிவோம்
வாயும் கையும் மனமும் ஓய்ந்தனம்!',**

ஐயனே! நாங்கள் மிகவும் இடர்ப்பட்டோம், என்றாலும் உன்மீது கோபங்கொள்ளவில்லை, நீரோ, எதிரிகளுக்கே உழைத்தீர்! அதனால் மனங்களித்தீர்! உமது வாழ்நாளை வீணாக்கினீர்! வயதோ உமக்கு அறுபது ஆகிவிட்டது, உடலம் தேய்ந்துவிட்டது, உள்ளமும் அவ்வாறே! இதுகாறும், எமைவிட்டு, எதிரிக்கு உழைத்தீர், என்றாலும், சென்றதைமறப்போம், இனியேனும் நீர் எம்மிடம்அன்பு கொண்டு, எமக்காகப் பணிபுரியவந்தால்

உமது சொல்கேட்டுநடக்கப் பல ஆயிரவர் நாங்கள் இருக்கிறோம். ஐயா! இனியும் எங்களைக் காட்டிக்கொடாதீர்!!—என்று கலியாணசுந்தரனாரை, வள்ளுவர் கழகத்தினர் கேட்டுக்கொண்டனர்.

புகழுரைகேட்ட பின்னர், உபதேச உரை அருளிவிட்டுவரலாம் என்றே, புதுமையைக்காணப் பழமையில் புரளும் பாவாணர், லால்குடிசென்றார்; அங்கோ, புகழ்ந்துரைத்துவிட்டு, இதுவரை எதிரிக்கு உழைத்தீர், எம்மைக் கெடுத்தீர், இனியேனும் காட்டிக்கொடுக்காதீர், என்று கூறிடும் கழகத்தினரைக் கண்டார்! உண்மையே, அவர்கள் உரைத்தனர், எனினும், கலியாணசுந்தரனாருக்குக் கடுங்கோபம் பிறந்ததாம், கனல் கக்கினாராம், புனலைச் சொரிந்தாராம், பிடிசாபம் என்றாராம், இஃதோ வரவேற்பு எனக்கேட்டாராம்! அவர்நிலை, எவ்வாறு இருந்திருக்குமென்பதை விளக்கத் தேவையில்லை.

பொதுவாழ்விலே, அப்புனிதர் நுழைந்தநாள்தொட்டு ஆரியருக்கே உழைத்தவர், அந்த உண்மையை, அவருக்கு எடுத்துரைத்த, நெஞ்சுறுதியும் நேர்மைத்திறனும், லால்குடித் தோழர்கட்கு இருந்தது காண நாம் மிகமகிழ்கிறோம். இச்சகம் பேசும் நச்சுக் குணமின்றி, மனதிற்பட்டதை-மெய்யை, ஆண்மையுடன், அவர்முன்கூறின மாண்பினை நாம் பாராட்டுகிறோம். புகழ் எனும் போதையை அப்புலவருக்கு ஊட்டி, அவரை ஆட்டிவைக்கும் சுயநலமிகள் பலருண்டு. அவர்களின் புகழுரைகள், பொய்யுரைகளாக அமைவது என்பது மட்டுமல்ல, அவர்முன்னால் அதுபோல் கூறிவிட்டு, அவர் காணாதபோது, "எதறிவார் அந்த முதியோர்! எந்த நேரமும் ஆரியருக்கே வந்தனைபுரிவார்! நொடித்தவரை நிந்திக்கலாகாதென்றே, பலகூறிப் புகழ்ந்தோம்," என்று பழிபேசுவோரையும் நாமறிவோம். வள்ளுவர் கழகத்தினர், வாய்மையைக் கைவிடாது, அறுபதாண்டுக்குப்பிறகேனும் அறிவுதெரிந்த அன்பர் கலியாணசுந்தரர், தமிழருக்குப் பணிபுரியவேண்டுமென்று, விரும்பி, அதனை அவர் முன்னிலையில் எடுத்துரைத்தனர். இது அவரை இழித்துப்பேசியதென்றோ, வரவழைத்து வம்புக்கு இழுப்பதென்றோ, தோன்றிடக்கூடும். அந்த மயக்கமும் கோபமும் மங்கியபின்னர், கலியாணசுந்தரர், யோசிப்பின், நிச்சயமாக உணர்வார், தமிழர் இடர்பல பட்டகாலை, இவர் ஆரியருக்குப் பணிபுரிந்துவந்ததுபாதகம், என்பதனைக் காட்டிக்கொடாதீர் என்ற, உரை, அவர் செவியிலே ஒலித்தபடி இருக்கும். லால்குடித் தோழர்கள்கூறிய, இம்மணிமொழி தமிழகம், அவருக்குக் கூறுமொழிஎன அவர் கொள்ளல்வேண்டும். "விருந்துக்கு அழைத்தீர், இந்த விபரீதம் விளைத்தீர்" என்று கேட்டாராம் கலியாணசுந்தரனார், விருந்துக்கு அறுசுவை உண்டிஉண்டு! இனிப்பொன்றே போதும்என்று, உண்பவரும் விருந்திடுவோரும் கருதார்! அறுசுவை உண்டியிலே இனிப்புப்போன்றது, அவருக்களித்த வரவேற்பிலே காணப்படும் புகழுரைகள்! கைப்புப்போன்றது, அவருடைய "பூர்வகருமத்தை" எடுத்துரைத்தது. காரம், **காட்டிக்கொடாதீர்**, என்று கேட்டுக்கொண்டபகுதி!! இந்த அறுசுவை உண்டியை அறுபதாண்டு அருங்கலையாளருக்கு அன்பு காரணமாக அளித்த லால்குடி, வள்ளுவர் கழகத்தாரை நாம் பாராட்டுகிறோம், ஏனெனில் செந்தமிழின் சுவையிலே, தம்மை மறந்திருக்கும் கலியாணசுந்தரனாருக்குத் தமிழகத்தின் கருத்துஇதுவென எடுத்துக் காட்டினர் அக்கழகத்தினர். புகழுரைகளைக் கேட்டுக் கேட்டுப்பூரித்ததால், பூசுரருக்குத் தோழராக இருந்துவரும் கலியாணசுந்தரனார், கலையையும் காவியத்தையும் காப்பாற்றுவேன், சைவத்தையும் புராணத்தையும் பாதுகாப்பேன், சுயமரியாதையைச் சமருக்கு இழுப்பேன் என்று எக்காளமிடத் துணிவுகொண்டனர். புகழுரைகேட்ட போதையால், பித்தம்மேலிட, பித்தத்தின் விளைவாக இப்பேச்சாளர் பிதற்றுகிறார் என்று நாம் எண்ணி, இந்நோயை முற்றவிடக்கூடாதேஎன்றுசஞ்சலப்பட்டோம், லால்குடி அன்பர்கள், கலியாணசுந்தரனாரைக் கப்பிக்கொண்டிருந்த அந்தப் பித்தத்தைப், போக்கினர், விருந்திலே மருந்துதந்து!!

# வாழ்த்துகிறோம்!

"சண்டே அப்சர்வர்" ஆசிரியர்மீது, மாஜிமந்திரி இராசகோபாலாச்சாரியார் தொடுத்த அவதூறு வழக்கிலே, ஹைக்கோர்ட்டார், கீழ்க்கோர்ட் தீர்ப்பை ரத்துசெய்தனர், ஆசிரியர்மீது குற்றம் ஏதுமில்லை என்று கூறியிருக்கின்றனர். நீதிவென்றது என்பதுமட்டுமல்ல, இந்த வழக்கு முடிவுகாட்டும் பாடம், ஆச்சாரியாருக்குத் தோல்வி அடுக்கடுக்காக வருகிறது என்பதும் இதனால் விளங்குகிறது.

இந்த வழக்கை, இந்தியாவில் பல பாகத்தினரும் கூர்ந்து கவனித்து வந்தனர். ஆசிரியர், வக்கீல்களின் உதவியின்றித்தாமே வழக்கைத்திறம்பட நடத்தி வெற்றி பெற்றார்-இதனால் நாம் அடையும் மகிழ்ச்சியும் பெருமையும் இரட்டிப்பு ஆகிறது. ஒரு ஆசிரியர்மீது வழக்குஎனும் பாணம் தொடுத்தால், வழக்கைநடத்த வகையோ, பணமோயின்றி, அவர்பணிவார், அதுகண்டு, மற்றைய பத்திரிகையாசிரியர்களும், எதைஎழுதினால் என்ன குற்றம் நேரிடுமோ என்று நடுங்கி, பேனாவை உலரவிட்டுவிடுவார், என்ற பித்தத்தைத் தோழர் பாலசுப்பிரமணியம், சாடினார். வழக்கு நடத்துகையிலே அவருக்குஇருந்த கஷ்டங்களும், வாய்உபசாரத்தைச் சாமாரியாக வழங்கிப் பண உதவிஎன்றபோது கரத்தையும் கருத்தையும் பலர் சுருக்கிக்கொண்டதையும் எண்ணும்போது, இவ்வளவு தொல்லைகளையும் அவர் சமாளித்து, வழக்கு மன்றத்திலேநின்று "வாதாடி" வென்றதானது, ஆச்சரியப்படத்தக்கதுதான்! சண்டே அப்சர்வர், பத்திரிகை, தமிழரின் எதிரிகளுக்குச்சற்று சுரீலெனச் சவுக்குத்தருவது-காரணம், அந்த எதிரிகளின் ஏகபோக உரிமையைத்தகர்த்துத் தமிழருக்குத் தனிஅரசு காணவேண்டுமென்னும் பேரவாவன்றி வேறில்லை. அத்தகைய பணிபுரியும் ஆசிரிய அன்பருக்கு ஆச்சாரியாரின் பாணம் பாய்ந்து, அம்பு கூர் மழுங்கிக் கீழே வீழ்ந்ததானது, ஆனந்தமானது, அதைவிட மகிழ்ச்சி அதிகம் தமிழருக்கு! நீதியை, வழக்குமன்றத்திலே நிலைநாட்டிய, அன்பரைநாம் மனமார வாழ்த்துகிறோம்.

---

## சென்னையில்
# "சந்திரோதயம்"

27—2—44-ல் சென்னை V. P. ஹாலில் சந்திரோதயம் நாடக நடைபெறும்.

---

## புரட்சிக் கவியின் புதல்வி திருமணம்.

[ஒரு நிருபர்]

தமிழகத்தின் ஒப்பற்ற கவி, தன்மான இயக்கத்தளபதி, புரட்சிக்கவி கனகசுப்புரத்தினம் (பாரதிதாசன்) அவர்களின் திருக்குமாரி, சரசுவதி அம்மைக்கும், சேலம்வட்டார வேலூர் உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியரும் புத்துலகப் புலவரும் புரட்சி வீரருமாகிய தோழர் கண்ணப்பனார் அவர்கட்கும், புகலூருக்கடுத்த, கட்டிபாளையம் கிராமத்தில் மணமகனில்லத்தில், வாழ்க்கை ஒப்பந்த விழா, சேலம் கல்லூரித்தலைமைப் பேராசிரியர், தோழர் A. இராமசாமிக்கவுண்டர் அவர்கள் தலைமையில் ஜனவரி 23ம் நாள்காலை விமரிசையாகநடந்தேறியது. புரட்சிக் கவியின் புதல்வியின் புதுமனை புகுவிழாவிலே, கலந்து பெருமையும் பூரிப்பும் கொள்ளப் பல்வேறு ஊர்களிலிருந்து பாவலரும் நாவலரும், தலைவரும் தோழரும், குழுமினர். பெரியார் அங்குமிங்கும் நடமாடி அகமகிழ்வை முகமலர்ச்சியால் புலனாக்கியபடி, வருவோரை உபசரித்து, வாராதார் விடுத்தமடலைக்கண்டு காரணமறிந்து, தமிழ் அரசு அமையின் அவைப்புலவராக அமரவேண்டிய அரும்புலவரின் மனைமகிழ்ச்சியிலே, தமிழர் தலைவருக்குப் பெரும்பங்கு உண்டென்னும் உண்மையை உரைத்திடுவார் போல் விளங்கினார். பெரியார் இல்லத்து மகளிரும, பிற தமிழ் மங்கையரும், கவிதையால் தமிழ

(6-ம் பக்கம் பார்க்க)

# பார்வதி பி. ஏ;

3-ம் பக்கத் தொடர்ச்சி.

கும்" என்று சிலர் கூறுவர். அவனிடம் எனக்கு விசேஷமதிப்பு உண்டு; ஒரு கெம்பீரபுருஷன் இருக்கவேண்டியமுறை இதுதான், என்று நான் மற்றவர்களிடம் வாதாடுவேன். "இப்படித்தாண்டி, இருப்பான்! எவள்மீதாவது, மோகம்பிறந்துவிட்டாலோ, பைத்யக்காரனாகிவிடுவான். யுக்தியோசனை, சமயசந்தர்ப்பம் எதுவும் அப்போதுதெரியாது. வெறிபிடித்தவன் போலாவான்" என்று சில நண்பர்கள் கூறினர்.

மாணவர் உலகுக்கே உதாரணபுருஷன் என்றுநான் மதித்த, மாதவன், எனக்குக் காதற்கடிதம் எழுதியது, காணநான் திடுக்கிட்டுப்போனேன். உணர்ச்சிக்கும் அவனுக்கும் சம்பந்தமே இராதுஎன்று எண்ணிக்கொண்டிருந்த என்னை மாதவன் தீட்டியகடிதம், தூக்கிப்வாரிப் போட்டது. அதிலும், அந்தக்கடிதத்தை, புரபசர் பாஸ்கரன்கொடுத்ததன் மர்மம் விளங்காததால், என்மனம் குழம்பிற்று. புரபசரிடம் எப்படி இக்கடிதம் சிக்கிற்று, இதை அவர் ஏன் என்னிடம் கொடுத்தார், கொடுக்கும்போது ஏன் அவ்வளவு குழைந்தார், என்பது எனக்குப்புரியவில்லை. ஒன்றுமட்டும் புரிந்தது, மாதவனுடைய கடிதத்தைப் படித்ததும் புத்தகசாலைகளிலே அவன் பொழுதுபோக்கியது வீண்போகவில்லை, என்பது புரிந்தது. கடவுளுக்கும் காதலுக்கும் உள்ள ஒப்பு உவமைபற்றி, பல நூல்களிலிருந்து மேற்கோள், காந்தம் ஊசியை இழுப்பது, கனியிலே சுவைமிகுவது, தென்றலிலே குளிர்ச்சிதங்குவது முதலிய உவமைகள், அக்கடிதத்திலே நிரம்பஇருந்தன. ஒவ்வொரு புத்தகத்தைப்படிக்கும்போதும், கதாநாயகியின் வருணனை, அவனுக்கு என்னைத்தான் நினைவூட்டுமாம்! என்கூந்தலின் கருமையும், என்கண்களின் ஒளியும் அவனுக்கு, மேகம் சூழ்ந்தவானமும் அதிலேமின்னும் நட்சத்திரமும்போன்று காணப்பட்டதாம்! எனது நடையழகு அவனுக்கு, எத்தனையோ பட்டத்தரசிகளின் வரலாற்றை நினைவிற்குக்கொண்டு வருமாம். நெடுநாட்கள்வரையிலே நான் அக்கடிதத்தைப் பத்திரமாகவைத்திருந்தேன். காதற்கடிதத்திற்கே, மாதவன் ஒரு இலக்கியம் தயாரித்துவிட்டான் என்று சொல்லவேண்டும். எனக்கு, அக்கடிதத்தின் நடைஅழகு அவ்வளவு ஆச்சரியத்தை அளிக்கவில்லை, ஏனெனில், ஏராளமாகப்படித்த மாதவனுக்கு இது சுலபம். ஆனால் எனக்கு ஆச்சரியமாக இருந்தது, எதுவென்றால், இந்தமாணவமகரிஷி இவ்வளவு காதற்பித்தத்தை எப்படி அடக்கிக்கொண்டு, சாந்தசொரூபியாய், ஆஸ்ரமத்திலே உலவுவதுபோல இருந்தவன்தான் என்பதுதான்! கடிதத்தைக் காணுமுன்பு, யாராவது மாதவன் காதல்கொண்டிருக்கிறான் என்று என்னிடம் கூறியிருந்தால் நான் நம்பியே இருக்கமுடியாது. கடிதத்திலே, "உன் அன்பை எனக்கு அளிக்காவிட்டால், நான் தேய்ந்து மாய்ந்துபோவதுஉறுதி, பிறகுநீ, எந்த அரண்மனையிலே, எந்த அரசிளங்குமரனுடன் உலவினாலும், உனக்கு ஆனந்தம்கிடைக்காது, ஒருவாலிபன் உன்அழகால் மாண்டான், என்ற நினைவு உன்னை வருத்தும்!"

"மாதவன் புத்தகப்பிரியன் என்று எல்லோரும் கூறுகின்றனர். மாதே! நானோ ஒவ்வோர் ஏட்டிலும் உன்னைத்தான் காண்கிறேன். ஒவ்வொரு கவியின் உன்னத சிருஷ்டியும் உன் ஒரு புன்சிரிப்புக்குத் தோற்றுவிடுவதைக்காண்கிறேன். உத்தம இலட்சணங்களுக்கு உறைவிடமாகக் கதாநாயகியைக் கற்பனைசெய்யும் கவிகள் அத்தனைபேரும் உன்னைக்காணாததால், குறையுள்ள குமரிகளைப்பற்றியே சித்திரம் தீட்டினர் என்று நான் உறுதியாகக் கூறுவேன்"

"வனிதையே! வாழ்க்கை ஒரு பெருங் கடல்! நான் அதிலே தத்தளிக்கிறேன்! நீயே தோணி! நெஞ்சிலேஇரக்கம்கொள், இந்தப் பஞ்சையைக் காப்பாற்று, காதல் எனும் மருந்திட்டு என்னைப்பிழைத்திடச் செய்"

இவையும் இன்னும் இவைபோன்ற வாசகங்களையும், மாதவன் தன் கடிதத்திலே கொட்டியிருந்தான். எனக்கு இரண்டாவது முறை அக்கடிதத்தைப் படிக்கும்போது, கொஞ்சம் எரிச்சலாக இருந்தது. இப்படியும் ஒரு பைத்யக்காரன் இருப்பானா என்று தோன்றிற்று, இவன் படித்தது அவ்வளவும் இப்படிக் கடிதம் எழுதுவதற்குத்தானா என்று எண்ணிடச் செய்தது. ஆனால், முதல்முறை, படித்ததும், கொஞ்சம் பெருமை உண்டாயிற்று. மாணவமணி இனிநம்காதலுக்கு அணி! என்று பெருமை கொண்டேன். எவளையும் ஏறெடுத்துப்பாராத புத்தகப்பிரியனை நமது அழகு, அடிமைகொண்டுவிட்டதல்லவா, என்று பூரித்தேன். மாதவனையே இப்படி ஆட்செய்ததே நமது அழகு, மாதரைப்பூஜைசெய்யும்மற்றவாலிபர்கள் என்னபாடுபடுகின்றனரோ என்றெண்ணிச் சிரித்தேன். மாதவனைப்போலப்பக்கம்பக்கமாக அவர்களுக்குக்கடிதம் எழுதத்தெரியாது, என்றாலும், அவர்கள் என் அழகுக்குத் தப்பமுடியாது, என்று எண்ணிக் கர்வமும் அடைந்தேன். பிறகு ஒரு சிந்தனை பிறந்தது. இவ்வளவு அமோகமான மோகங்கொண்டுள்ள மாதவன் விஷயமாக இனிநான் எப்படி நடந்துகொள்ள வேண்டும், அவனைக் காதலிப்பதா, நிராகரிப்பதா, என்ற பிரச்னை எழுந்தது. மாதவன் என்முன்மண்டியிடுகிறான் என்று கூறிக்கொள்வதிலே பெருமை கொண்டேனேயன்றி, அவனை ஏற்றுக்கொள்ள என்மனம் இடந்தரவில்லை. அவனுடைய கடிதமோ, அளவு கடந்த, அடக்கமுடியாத ஆவலை அவன் கொண்டிருக்கிறான் என்பதைக் காட்டிற்று".

[தொடரும்]

---

# புரட்சிக்கவியின் புதல்வி திருமணம்

(5-ம்பக்கத்தொடர்ச்சி.)

கத்தை வளமாக்கும் வீரன் பெற்றெடுத்த பெண்மணிக்குப் பக்கநின்று பரிவுடன் உபசரித்துப், பரமானந்தமடைந்தனர். செட்டிமார் நாட்டிலே சீர்திருத்தச்சிங்கமென உலவும், வை. சு. சண்முகம் அவர்கள், கெம்பீரமாகஉலவி ,வருவோரைஅன்போடு உசாவி, மணவினையினை அமைத்த மாண்புடைத் தோழியர் மஞ்சுளாபாயம்மையுடன் அங்கு இருந்தார்.

பலதோழர்கள் பாரதிதாசனின்பாடல்களைப் பாடினர். வாழ்க்கை ஒப்பந்தப் பத்திரத்தை வாசித்தபின்னர், வாழ்க்கையும் புதுமணமுறையும் என்பதுபற்றித், தலைவரும், கனகம்மையார், அரசியல் மணி அம்மையார், அண்ணாத்துரை, பெரியார், சி. பி. சின்னராசு, குரு இராமலிங்கம் ஆகியோர், சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். வரவேற்புரைகளும் பரிசளிப்பும் நடந்தேறியபிறகு, விருந்து நடைபெற்றது. பிற்பகலில் பலர் தமிழர் இயக்கப் பாடல்களைப் பாடினர். மணவிழாமகிழ்ச்சிகரமாக நிறைவேறியதுடன், கிராமமக்களிடை விழிப்பை உண்டாக்க உதவிற்று.

வாழ்க கவி அரசனின் கன்னி!

வாழ்க அக்கன்னியைத் துணைகொண்ட கண்ணப்பர்!

---

## செங்கற்பட்டு ஜில்லா,
# சப்-கலெக்டர் கைது.

செங்கற்பட்டு ஜில்லா சப்-கலெக்டர் T. S. சுவாமிநாத ஐயர், I. C. S. ராஜமஹேந்திரத்தில் வேலைபார்க்கையில், மோசடி குற்றம்செய்ததாக (409 செக்ஷன்படி), கைது செய்யப்பட்டார். இவர், காஞ்சீபுரம் நகரசபைக்கும் (அபிஷியல்) சேர்மனாக இருந்தார். இந்த வழக்கை விசாரிப்பதற்கு ஒரு விசேஷ மாஜிஸ்ரேட் நியமிக்கப்பட்டுள்ளார். தோழர் சாமிநாத ஐயர் கொடுத்தஜாமீன் மனு நிராகரிக்கப்பட்டுக் காக்கிநாடா சப்ஜெயிலில் ரிமாண்டில்வைக்கப்பட்டுள்ளார்.

## பகற்கொள்ளை!

2-ம் பக்கத்தொடர்ச்சி.

7. கல்பவிருக்ஷதானம்—(3) பலம் முதல் (1,000) பலம்வரையில் பொன்னால் திரிமூர்த்தி பிரிதிமைகளுடன், (5) கிளைகளோடு நானாவித பக்ஷிகள், பழங்கள் முதலியவற்றுடன் கற்பகத்தருசெய்வித்துக்கிழக்கில்சந்தான விருக்ஷத்தையும், தெற்கில் லக்ஷ்மியோடுகூடிய மந்தாரவிருக்ஷத்தையும், வடக்கில் சுரபியோடுகூடிய சந்தனவிருக்ஷத்தையும் நிருமித்து விதிப்படி ஓமாதிகள் பூஜைமுதலிய செய்து நமஸ்கரித்துத்தானஞ் செய்வதாம். இவ்வகைச்செய்தவன்சித்த, சாரண, கின்னர, அப்சரசுக்களால் சேவிக்கப்பட்டுச் சூரியவருண விமானத்தேறி (100) கல்பம் விஷ்ணுபதத்தில் இருப்பன்.

8. கார்ப்பாஸதானம் - ஐந்து பாரம் முதல்(20)பாரம் நிறையுள்ள பருத்தியைத் தானஞ்செய்வதாம். இதைச் செய்தவன் உத்திரலோக மடைவன்.

9. கிருதபர்வதானம் – (5) கும்பம் நெய்முதல் (20) கும்பம் நெய்யைதானஞ் செய்வதாம். இப்படிச் செய்தவன் சிவபதம் பெறுவன்.

10. கிருஷ்ணாஜினதானம்-மாசி, ஆடி, கார்த்திகை மாதங்களிலும், பௌர்ணிமை, சந்திரசூரியகிரகணம், உத்தராயண துவாதசி, புண்ணியகாலங்களில், ஆகிதாக்கினியாகிய வேதியனுக்கு விதிப்படி கிருஷ்ணாஜனம் (மான்தோல்) தானஞ் செய்தலாம். இவ்வகைப் புரிந்தவன் சிவசாயுச்யம் அடைவன்.

11. குடதேவனு தானம்-நாலு பாரம் முதல் கூடியவரையில் பெல்லத்தால் பசுவும் கன்றும்செய்வித்து ஆபரணங்களால் அலங்கரித்து விதிப்படி பூசித்துத்தானஞ் செய்வதாம். இவ்விதம், வெண்ணெய், எள், தான்யம், சர்க்கரை, உப்பு, ரத்னம் பொன்முதலியவற்றாலும் செய்வித்து மந்திர ஆவாகனஞ்செய்து தானஞ் செய்யின் நெடுநாள் கோஉலகத்தில் சகல சௌபாக்கியங்களை அநுபவித்துப் பின் விஷ்ணுபதம் அடைவன்.

12. குடபர்வததானம்—மூன்று பாரம் முதல் (10) பாரம்வரையில் பெல்லத்தால் பர்வதம் செய்வித்து விதிப்படி தானஞ் செய்வது. இவ்வகை செய்தவனுக்குப் பசுபதி சாந்நித்யமாவர்.

13. கோசகஸ்திதானம்—(3) பலம் முதல்கொண்டு (1,000)பலமுள்ள பொன்னால் (10) பசுக்கள் செய்வித்து அவற்றினிடையில் ஒரு பொன் விருக்ஷம் செய்வித்து நிறுத்திப் பின் (1,000) பசுக்களை, பொன்வெள்ளி முதலானவைகளா லலங்கரித்துவிதிப்படி பூசித்துத் தானஞ் செய்வதாம். இவ்வகைச் செய்தவன் பாபம் நீங்கித் தன்னுடைய (101) கோத்திரத்துடன் தானும் கைலையில் வசிப்பன்.

14. சர்க்கராபர்வததானம்— இரண்டு பாரம் முதல் எட்டுப் பாரம் வரையில் சர்க்கரையை மலைபோல் குவித்து தானஞ்செய்வது. இதைச்செய்தவர் சிவபத மடைவர்.

15. சப்தசாகரத்தானம்— (5) முதற்கொண்டு(1,000)பலம் அளவுள்ள பொன்னால் சாண் அளவுள்ள (7) கும்பங்கள் செய்வித்து முதல்கும்பத்தில் உப்புநிறைத்துஅதில் சரஸ்வதியுடன் கூடியபிரமதேவனையும், இரண்டாவதில் பால்நிறைத்து விஷ்ணுமூர்த்தியினையும், (3-வதில்) நெய் நிறைத்துச் சிவமூர்த்தியையும் (4-வதில்) பெல்லம் நிறைத்துச் சூரியனையும் (5-வதில்) தயிர் நிறைத்துச் சந்திரனையும், (6-வதில்) சர்க்கரை நிறைத்து லக்ஷ்மியையும் (7-வதில்) சுத்தோதகம் நிறைத்துப் பார்வதியார் முதலியவர்களை எழுந்தருளுவித்து விதிப்படி பூசித்துத் தானாதிகளைச் செய்வது. இங்ஙனஞ் செய்தவன் விஷ்ணுபத மடைவன்.

16. சுவர்ணபர்வத தானம்—(250) பலம் முதல் (1,000)பலம் பொன்னினால் பர்வதம் செய்வித்து விதிப்படி தானஞ் செய்யின் பிரமபதம் அடைவன்.

17. சையாதானம்-கல்லமரத்தில் கட்டில் செய்வித்து அதனைப் பலவிதமாக அலங்கரித்துப் பாய்விரித்துத் தீர்த்தம், சந்தனம், புஷ்பம், தாம்பூலம், மற்றும் ஸ்திரீ புருஷர்களுக்கு வேண்டியவும் அமைத்து நவக்கிரக பூசைசெய்துதானஞ் செய்தல். இதனால் சுவர்க்கம் உண்டாம்.

18. தராதானம்-(100) முதல் (1,000) பலமுள்ள பொன்னினால் ஜம்புத் தீவு போல் அநேக பர்வதசாகர நகர கிராமங்கள், 'பாரதாதி நவவருஷங்களோடு கூடிய பூமி, அவைகளைச் சுற்றிக் கடல் செய்வித்து விதிப்படி பூசித்துத் தானஞ் செய்வதாம். இவ்வகைத்தானஞ் செய்தவன் தன் கோத்திரங்களுடன் (3) கர்ப்பகாலம் வைகுண்டத்தில் வசிப்பன்.

19. தான்யபர்வததானம்-இந்தப் பர்வததானம், லவணத்தாலும், பெல்லத்தாலும், பொன்னினாலும், வெண்ணெயாலும், எள்ளினாலும், இரத்தினத்தாலும், வெள்ளியினாலும், சர்க்கரையாலும் மலைபோற்செய்வித்து (1,000) மரக்கால் நெல்லை மேருவாகவைத்து நவமணிகளாலலங்கரித்து விதிப்படிபூசித்துத் தானஞ் செய்வது. இது செய்தவன் தெய்வவுலகடைவன்.

20. திக்பாலகதானம்—வேதியர் எட்டுப்பெயரை வருவித்து அவர்களை ஆசனத்திலிருக்கச்செய்து அவர்களினடுவில் சிவமூர்த்தியைப்பூசித்துப் பத்துக் கழஞ்சு பொன்னாற் பதினொரு விமானம் செய்வித்து அதை வேதியர்க்கு விதிப்படி தானஞ்செய்து பலவேதியர்க்கு அன்னமிடலாம்.

21. திலபர்வதானம்-மூன்று மரக்கால் முதல் பத்துமரக்கால் எள்ளினைப் பர்வதம்போற் குவித்து விதிப்படி பூசித்துத் தானஞ்செய்வது. இவ்வகைச் செய்தவன் சுவர்க்கமடைவன். 10 சாண்கோலொன்றுநட்டு அதுமறைய எள்கொட்டி அதன்மேல் மண்டலஞ்செய்து ஆடையால் மூடிமலர்தூவி அதில் சிவமூர்த்தி பள்ளிகொள்வதாய்த் தியானித்துச் சிவமூர்த்தியைப் பூசித்து விதிப்படி தக்ஷிணையுடன் பிராமணருக்குக் கொடுத்தலாம்.

22. துலாபுருஷதானம்—இத்தானஞ் செய்பவன் பரிசுத்தனாய்ப் பதினாறு முழத்திற்குக் குறையாமல் மண்டபஞ் செய்வித்துப் புண்ணியாவாசனம் முடித்து எழடிவேதிகை செய்வித்து நான்கு குண்டங்கள் செய்விக்கவேண்டும். பிறகு வேதிகையில் கலசத்தாபனம் செய்துஅதில் திரிமூர்த்திகளைப் பூசித்து எழுமுழமுள்ளதேவதாருமுதலிய இரண்டு கம்பங்களை இரண்டுமுழம் பூமியில் புதைத்து அதின்மேல் சுவர்ண முதலியவைகளால் அலங்கரித்துத் துலாதண்டம்நிறுத்தி லோகமயமாகும் தட்டுகளைச் சங்கிலிகளில் மாட்டி அத்துலாத்தைத் கொடி முதலியவைகளாலலங்கரித்துக் குருவையும் வேதமறிந்த எட்டுருத்விக்குகளையும் வருவித்து நான்கு திக்குகளில் இவ்விருவரைநிறுத்திப் பிரமாதிதேவர்க்கு ஓமஞ்செய்து எஜமானன் (பிராமணருடன்) ஆசாரியருடன் பலி பூசைகள் முடித்து அத்தினத்தில் எல்லோரும் உபவசிக்கவேண்டும். மறுநாள் ஸ்நானாதிகள் முடித்துப் பரிசுத்தனாய்நானாவித பூஷணாலங்கிருதனானஎஜமானன், ஆசாரியனோடு துலைக்கு நமஸ்கரித்துத்துலா ஆரோகணஞ் செய்தல்வேண்டும். அதில் ஒருதட்டில் எஜமானனிருந்து மறுதட்டில் ஸ்வர்ணத்தை வைத்துச்சமமாகத்தூக்கி க்ஷணநேரம் அதிலிருந்து அதனின்றும் இறங்கி அதிலுள்ள திரவியத்தில் பாதி ஆசாரியனுக்கும் மிகுதியை ருத்விக்குகளுக்கும்கொடுத்து அவர்கள் ஆக்கினையால் மற்றவர்களுக்கும் தானாதிகள் கொடுத்தல்வேண்டும். இப்படிச் செய்தவன் கீர்த்தியையும் ஆயுளையுமடைந்து விஷ்ணுபத மடைவன்.

23. பஞ்சலாங்கலதானம்-சாரமுள்ள நூறுகிராமங்கள் மரத்தாற்செய்யப்பட்ட ஐந்து கலப்பைகளையும், பொற்கொம்பாலலங்கரிக்கப்பட்ட பத்து எருதுகளையும் ஐந்துமுதல் (1,000) பலம்உள்ள பொற் கலப்பைகளையும் கன்றோடுகூடிய பசுக்களையும் விதிப்படி பூசித்துத் தானஞ் செய்வதாம். இவ்வகைச் செய்தவன் விமானமேறிச் சிவபதம் அடைவன்.

24. பிரமாண்டதானம்-இருபது பலம் முதற்கொண்டு (1,000) பலம் வரையில் தன் சக்திக்கு இயன்றஅளவு (100) அங்குல நீளம் இரண்டு கலசங்களும், எட்டுத் திக்கு யானைகளும், அஷ்டதிக்கு பாலகரும் உள்ள ஒரு பிரமாண்டத்தைச்செய்வித்து அதில் திரிமூர்த்தி விக்ரகங்களை எழுந்தருளச்செய்து பட்டு வஸ்திராபரணாதிகளால்அலங்கரித்து அந்தப் பிர

8-பக்கம் பார்க்க.

## பகற்கொள்ளை!

மாண்டநர்தை இரண்டு மரக்கால் எள்ளில் நிறுத்தி விதிப்படி பூசை முதலிய முடித்துத் தானஞ்செய்வதாம். இவ்வகை செய்தவன் பாபம்நீங்கி இந்திரபதமடைவன்.

25. **மகாபூதகடதானம்**-நூறு அங்குல நீளமுள்ளதாய், நானுவித ரத்தினங்கள் இழைத்த கும்பத்தை பால் நெய் முதலியவைகளால் நிறைத்து அதில் ஒரு சுவர்ண கற்பவிருக்ஷத்தை நிறுத்தி விதிப்படி பூசித்துத் தானஞ்செய்வதாம். இவ்வகைச்செய்தவன் கோடிசூர்யப் பிரகாசமுள்ள விமானமேறி வைகுண்ட பதம் அடைவன்.

26. **ரத்னதேனுதானம்**-வச்சிரம், பவளம், வைடூரியம், கோமேதகம், புஷ்பராகம், மரகதம், மாணிக்கம், பெல்லம் முதலியவற்றால் புராணுதிகளில் கூறியபடி ரத்னபசு செய்வித்து விதிப்படி பூசித்துத் தாணுதிகளைச் செய்வதாம். இவ்வகைசெய்தவன் விஷ்ணுபதமடைவன்.

27. **ரத்னபர்வததானம்**—முந்நூறு பலம் முதல் (1000) பலம் வரையில் இரத்தினத்தால் பர்வதஞ் செய்வித்துச் தானஞ் செய்வதாம். இது செய்தவர் பிரமகத்திதோஷம் நீங்கி விஷ்ணுபதம் அடைவர்.

28. **ரௌப்பியபர்வதானம்**—(2500) பலம் முதல் (10,000) பலம் வரையில் ரௌப்பியபர்வதஞ்செய்வித்துத் தானஞ் செய்யின் சிவலோக மடைவர்.

29. **லவண பர்வததானம்**:-நாலுமரக்கால்முதல் பதினாறு மரக்கால் வரையில் உப்பை விதிப்படி தானஞ்செய்யின்சத்தி உலகம் அடைவர்.

30. **விச்வசக்ரதானம்**-ஆயிரம் முதல் (2500)பலம் பொன்னால் பதினாறு இலைகளுள்ள விச்வசக்கரத்தை ஏழு ஆவரணத்தோடு கூடியதாகச் செய்வித்துச் சங்கு சக்கிரதாணுகிய விஷ்ணுமூர்த்தியை எட்டுத் தேவியருடன் உருவம் செய்வித்திருத்தி விஷ்ணுமூர்த்தியின் தசாவதார பதுமைகளை நிருமித்து விதிப்படி பூசித்துத்தானஞ் செய்வதாம். இவ்வகைத் தானஞ்செய்தவன் அரிபதமடைவன்.

31, **ஹேமஹஸ்திரத்தானம்**—ஐந்து பலம் முதல் ஒரு பாரம் வரையில் பொன்னால் புஷ்பரதம் செய்வித்து நான்கு பொன் யானைகளும், இரண்டு உயிர் யானைகளையும் பூட்டி அவ்விரதத்தின் மத்தியில் லக்ஷ்மீ நாராயணனையும் இரண்டு பக்கங்களில் பிரம்ம மகேச்வராதி தேவ விக்கிரகங்களையும் எழுந்தருளச் செய்து விதிப்படி பூசித்துத் தானஞ்செய்தலாம். இத்தானஞ் செய்தவன் வித்தியாதரரால் பூசிக்கப்பட்டுச் சிவபதமடைவன்.

32. **பருத்திதானத்தால்**-யமதூதரிடத்தில் அச்சம் உண்டாகாது.

33. **தானியதானத்தால்**—யமனும் தூதவரும் சந்தோஷித்து ஜீவனுக்கு வேண்டியவற்றைக் கொடுப்பார்.

34. **பூதானஞ்செய்யின்**-எத்தனை அடிகள் தானம் செய்தானே அத்தனைகாலம் சுவர்க்கத்தில் இன்புறுவன்.

35. **மாராடிதானத்தால்**-மார்க்கத்தில் முள் முதலியவற்றால் துன்புறாது குதிரையேறி யமபுரஞ் செல்வன்.

36. **குடைதானத்தால்**-நிழலுள்ள வழியிற் செல்வன், மழையால் துன்பமடையான்.

37. **தீபதானஞ்செய்யின்**-இருள் வழியில் பிரகாசத்துடன் செல்வன். மாண்டதுமுதல் ஓராண்டு தீபதானஞ்செய்யின் அவன் குலத்தோரையும் சுவர்க்கத்தில் புகுவிக்கும்.

38. **வஸ்திரதானஞ்செய்யின்**— யமதூதர் நல்லுருவத்துடன் தோன்றுவர்.

39. **பூமி, சுரபிகள், சுவர்ணம்**—இம்மூன்றும் தானங்களில் விசேடமாகும். எவ்விதமெனின் பூமி விஷ்ணுசம்பந்தமாதலாலும் சுவர்ணம் அக்கினியின் மகவாதலாலும், சுரபிகள் சூரியபுத்திரிகளாதலாலும் விசேஷமாகும். இவற்றைத் தானஞ்செயவோன் அம்மூன்று லோகத்தையும் அடைவன்.

40. **பருத்திதானம்** மகாதானமாகும்-இது தேவர் அந்தணர் முதலியோருக்குப் பூணூற்கு உபயோகம் ஆகையால் மிகச் சிறந்ததாம். இத்தானம் செய்தவன் சுவர்க்கவாசியாகச் சிலநாள் வசித்து அழகிய மேன்மையுடையவனாய்ச் சிவபதம் அடைவன்.

41. **திலதானம், கோதானம்** தானியதானம், சுவர்ணதானம், பூதானம் செய்யின்—மகாபாதகங்கள் நசிக்கும்.

42. **திலதானத்தாலும்** இரும்பைத் தானஞ்செய்வதாலும், யமன் உவப்படைகிறான்.

43. **இலவணதானத்தால்**— இருக்கிறவனுக்கு நமனிடம் அச்சம் உண்டாகாது.

இவைகளைப்படித்து, சிந்திப்பவருக்கு, ஆரியருக்கு எவ்வள பேராசை இருந்ததென்பதும், தமிழரின் செல்வம் எவ்வளவு அரிக்கப்பட்டதென்பதும் நன்கு விளங்கும். மதத்தின் பெயர்கூறி, வேறு எங்காவது இப்படிப்பட்டபகற்கொள்ளை நடந்ததுண்டா, என்று என்னைக் கேள்வி கேட்பவரை நான் கேட்கிறேன்.


ஆனந்த விருந்துக்கு அன்பழைப்பு.

# சென்னை ஒற்றைவாடை தியேட்டரில்

நாடகாசிரியர் திரு. T. P. பொன்னுச்சாமிப்பிள்ளை அவர்களால் பயிற்றுவிக்கப்பட்ட நடிகர்கள் நிறைந்த

**மதுரை ஸ்ரீ மங்கள பாலகான சபையார்,**

1944, பிப்ரவரி மாதத்திலிருந்து துவக்கி 3-மாதகாலம், பல இனியநாடகங்களை நடத்துவர்.

நடிகமணிகள்:—T. K. சம்பங்கி, P. V. எதிராஜ், M. E. யாதவன், K. D. சந்தானம், P.R. லெட்சுமிபதி P. S. தட்சிணாமூர்த்தி ஆகியோரின் நடிப்புத்திறன் உங்கட்கு ஆனந்தமூட்டும். மற்றும் சுமார் 150 நடிகர்கள் உள்ளனர். நூதன சீன்களும் உடைகளும் காணக் களிப்பூட்டும்.

இனிய இசை! கருத்துக்கினிய காட்சிகள்!

ஆரம்ப நாடகம் ★ லட்சுமீகாந்தன். ★

கண்டுகளியுங்கள்! திரண்டு வாருங்கள்!!


Edited Printed and Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press, 51-Chairman, Sambasiva Chettiar Street, L. Conjeeveram.